தொழில்நுட்ப உதவியுடன் வேளாண் துறையில் அதிக சாகுபடி

First Published : 24 Jun 2010 03:13:45 AM IST



சென்னை, ஜூன் 23: வேளாண் துறையில் தொழில்நுட்ப உதவியுடன் சாகுபடியைப் பெருக்க மத்திய அரசு முன்னுரிமை அளிக்கும் என்று மத்திய திட்டக் குழு உறுப்பினர் கே.கஸ்தூரி ரங்கன் தெரிவித்தார்.

தமிழக அரசின் வேளாண்மை மற்றும் கால்நடைத் துறைகளில் நடைபெறும் திட்டங்கள் குறித்த ஆய்வு மற்றும் எதிர்கால வரைவுத் திட்டங்கள் தொடர்பாக மத்திய திட்டக் குழு (அறிவியல் துறை) உறுப்பினர் கே.கஸ்தூரி ரங்கன் சென்னையில் செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்தார். மாநில அரசின் சார்பில் செயல்படுத்தப்படும் வேளாண் திட்டங்கள், விவசாயிகளுக்கான கடன் தள்ளுபடி, இலவச மின்சாரம், செம்மை நெல் சாகுபடி மற்றும் காவிரி டெல்டா பகுதிகளில் நெல் அதிகம் விளையும் மாவட்டங்கள் மற்றும் நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு இலவச நிலம் வழங்கப்பட்டுள்ளது குறித்து வேளாண் உதவி இயக்குநர் கோபாலகிருஷ்ணன் புள்ளி விவரங்களை வழங்கினார். மேலும் மாநிலத்தில் பயிரிடப்படும் பருப்பு வகைகள் குறித்தும் அடுத்த கட்ட இலக்குகள் குறித்தும் அவர் விவரித்தார்.

தோட்டக்கலைத்துறை சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து அதன் இயக்குநர் சந்திரமோகன் விவரங்களை தெரிவித்தார்.

மாநில அரசின் திட்டங்களை ஆய்வு செய்துவிட்டு, மத்திய திட்டக் குழு உறுப்பினர் கே.கஸ்தூரி ரங்கன் பேசியது:

வேளாண்துறையில் தொழில்நுட்ப உதவியுடன் அதிக சாகுபடியைப் பெருக்க மத்திய அரசு முன்னுரிமை அளிக்கும். சீரான உணவு உற்பத்தி அப்போது தான் சாத்தியமாகும். ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பத்தின் மூலமே இது சாத்தியமாகும். இதற்கு நிதி ஒரு பிரச்னை இல்லை. நாட்டில் எந்த ஒரு தனி மனிதனும் பசியால் வாடக்கூடாது என்பதே அரசின் இலக்காக உள்ளது. விவசாயத்துக்கு தண்ணீர் ஒரு பிரச்னையாக உள்ளது. அடுத்து பருவ நிலை மாற்றம் என வேளாண்துறை பல்வேறு பிரச்னைகளை சந்திக்கிறது.

எனவே குறைந்த அளவு தண்ணீரை வைத்துக் கொண்டு, சாகுபடியை எவ்வாறு அதிகப்படுத்துவது என்பதே அரசின் முக்கிய இலக்காக உள்ளது.

மாநிலங்களில் மேற்கொள்ளப்படும் வழக்கமான விவசாய முறையால் 4 டன் நெல் தான் சாகுபடி செய்யப்படுகிறது. இப்போது செம்மை நெல் சாகுபடி என்ற புதிய திட்டத்தில் 10 டன் நெல் சாகுபடி செய்ய முடிகிறது. இத்திட்டத்தின் மூலம் காவிரி டெல்டா பகுதிகளில் குறைந்த அளவு தண்ணீரை கொண்டு, அதிக நெல் சாகுபடி செய்ய முடியும்.

இத்திட்டம் மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப்பட வேண்டும். போதிய மழை இல்லாத நிலையிலும்கூட மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது தமிழகம் வேளாண் துறையில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. தமிழகத்திற்கு 21 மில்லியன் டன் பருப்பு தேவைப்படுகிறது. ஆனால், மாநிலத்தின்  மொத்த உற்பத்தி வெறும் 14 மில்லியன் டன்தான். எனவே பருப்பு உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை மேம்படுத்த வேண்டும். மாநிலங்களிடம் பெறப்படும் வரைவு திட்டங்கள் மற்றும் பிரச்னைகள் குறித்து மத்திய வேளாண்துறை அமைச்சரின் கவனத்துக்கு எடுத்து செல்லப்பட்டு, தீர்வு காணப்படும் என்றார்.

வேளாண்துறை செயலாளர் நந்தகிஷோர், வேளாண்துறை ஆணையர் கோசலராமன், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் தங்கராஜு, மத்திய வேளாண்துறையின் முதுநிலை ஆலோசகர் ரிஞ்சா, ஆலோசகர் சதாமதே, இணை ஆலோசகர் வசுந்தரா திவேதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**நீர்வளம், நிலவளத் திட்டம்: விவசாயிகளுக்கு விழிப்புணர்வு முகாம்**

First Published : 24 Jun 2010 08:32:22 AM IST

மதுராந்தகம், ஜூன் 23: அச்சிறுபாக்கம் வட்டாரம், ஆத்தூர் ஊராட்சியில் நீர்வளம் நிலவளம் திட்டத்தின் கீழ் ஒங்கூர் உபவடிநீர் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கான விழிப்புணர்வு முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

÷திண்டிவனத்தில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் எண்ணெய் வித்து ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் இம் முகாம் நடத்தப்பட்டது.

÷முகாமின்போது நீர்வளம், நிலவளம் திட்டத்தின் நோக்கம், செம்மை நெல் சாகுபடி, ஏரிப்பாசன விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேர் நிலப்பரப்புக்குத் தேவையான ரூ.6 ஆயிரம் மதிப்பிலான விதை, விதைப்புச் சட்டம், பாய்நாற்றாங்கால், உரம், பயிர் பாதுகாப்பு மருந்துகள் முழு மானியத்தில் வழங்கப்படும். மேலும் இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்குத் தேவையான தொழில்நுட்பங்கள் குறித்து நேரடியாக வயல்களிலேயே செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்படும் என்று எடுத்துரைத்தனர்.

÷இம் முகாமுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் ஏ.கே.மணி தலைமை தாங்கினார். திண்டிவனம் வேளாண்மை பல்கலைக்கழகத்தின் எண்ணெய் வித்து ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் சீ.அன்புமணி, வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஆர்.வெங்கடசுப்பிரமணியன், இளநிலை ஆராய்ச்சியாளர்கள் திரிபுரசுந்தரி, ஜெயலட்சுமி ஆகியோர் விவசாயிகளுக்கு இத் திட்டத்தைப் பற்றி
விளக்கினர்.

÷வேளாண்மை பல்கலைக்கழகமும், வட்டார வேளாண்மை அலுவலகமும் இணைந்து நீர்வள, நிலவளத் திட்டத்தை அச்சிறுபாக்கம் வட்டாரத்தில் செயல்படுத்தயுள்ளதாக வேளாண்மை உதவி இயக்குநர் ஆர்.வெங்கடசுப்பிரமணியன் தெரிவித்தார்.

**விவசாயிகள் விவரங்கள் இணைய தளத்தில் பதிவு**

First Published : 24 Jun 2010 09:12:42 AM IST

திருச்செங்கோடு, ஜூன் 23: திருச்செங்கோடு வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் பற்றிய அடிப்படை புள்ளி விவரங்களை இணையதளத்தில் பதிவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கிராமங்களில் இதற்கான விவரங்கள் சேகரிப்பு பணியில் உதவி வேளாண் அலுவலர்கள் ஈடுபட்டுள்ளனர். வேளாண்துறையின் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தவும், அனைத்து விவரங்களையும் ஒருங்கிணைத்து திட்டமிடவும் இந்த அடிப்படை புள்ளி விவரங்கள் தேவைப்படுகின்றன.

புள்ளிவிவர சேகரிப்பு பணிக்கு விவசாயிகள் முழு ஒத்துழைப்பு தரவேண்டும் என்று திருச்செங்கோடு வேளாண் உதவி இயக்குநர் (பொறுப்பு) ராதாமணி கேட்டுக் கொண்டுள்ளார். இதற்கான படிவததை பூர்த்தி செய்து அளிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**உரம் விற்பனையை கண்காணிக்க குழு**

First Published : 23 Jun 2010 10:04:01 AM IST

தேனி, ஜூன் 22: தேனி மாவட்டத்தில் முதல் போக நெல் சாகுபடி துவங்கியுள்ள நிலையில், விவசாயத் துறை சார்பில் உரம் விற்பனையை கண்காணிக்க குழு அமைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மாவட்ட விவசாயத் துறை இணை இயக்குநர் பாரி கூறியதாவது:

முதல் போக நெல் மற்றும் இதர பயிர்கள் சாகுபடிக்கு தேவையான உரம், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் விற்பனைக் கடைகளில் போதுமான அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

வேளாண்மை ஆணையர் உத்தரவின் பேரில் உரம் விற்பனையை கண்காணிக்க விவசாயத் துறை சார்பில் தேனி வேளாண்மை அலுவலகத்தில் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்புக் குழுவில் உள்ள வேளாண்மை அலுவலர்கள் காலை 10 மணி முதல் 6 மணி வரை பணியில் இருப்பர்.

பயிர் சாகுபடி குறித்த சந்தேகங்கள், சாகுபடிக்குத் தேவையான விதை, உரம், பயிர் பாதுகாப்பு மருந்து போன்ற விவசாய இடுபொருள்கள் குறித்து வேளாண்மை அலுவலர்களை நேரில் அணுகி தெரிந்துகொள்ளலாம்.

மேலும், கண்காணிப்பு அறை தொலைபேசி எண் 05446- 250102-ல் தொடர்பு கொள்ளலாம் என்று வேளாண்மை இணை இயக்குநர் கூறினார்

**ஆற்றில் விவசாய உறைகிணறுகள் அமைத்தால் நடவடிக்கை**

First Published : 23 Jun 2010 10:06:13 AM IST

தேனி, ஜூன் 22: பெரியாற்றில் குடிநீர் திட்டங்கள் தவிர, விவசாயம் மற்றும் இதர பயன்பாட்டிற்காக உறைகிணறுகள் அமைத்து பயன்படுத்துவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட ஆட்சியர் பூ.முத்துவீரன் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:

கோடையில் குடிநீர் தட்டுப்பாட்டை சமாளிக்க, பெரியாறு அணையிலிருந்து முல்லை பெரியாற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த நீரை விவசாயத்திற்கு பயன்படுத்தக் கூடாது

என்று அறிவித்தும், பல பெரும் விவசாயிகள் ஆற்றில் உறைகிணறு அமைத்தும், மோட்டார் பம்புகளை பயன்படுத்தியும் தண்ணீரை எடுத்து பயன்படுத்தி வருவதாக புகார் எழுந்தது. இதனால் அணையிலிருந்து குடிநீருக்காக திறக்கப்பட்ட தண்ணீர், குடிநீர் திட்டங்களுக்கு முறையாக சென்றடையவில்லை. எனவே, பொதுப்பணித் துறை, மின் வாரியம், காவல் துறையினர் மூலம் ஆற்றின் நடுவிலும், கரையோரங்களிலும் மின் வாரிய விதிமுறைகளை மீறி அமைக்கப்பட்டிருந்த 90-க்கும் மேற்பட்ட மின் மோட்டார் பம்புகள் மற்றும் உறைகிணறுகள் அப்புறப்படுத்தப்பட்டன. தற்போது குடிநீர் தட்டுப்பாடு சமாளிக்கப்பட்டுள்ள நிலையில், தாற்காலிகமாக துண்டிக்கட்டிருந்த 60-க்கும் மேற்பட்ட ஆற்றங்கரையோர விவசாய மின் இணைப்புகள் மீண்டும் வழங்கப்பட்டுள்ளன.

இருப்பினும், ஆற்றின் நடுவில் குடிநீர் திட்டங்கள் தவிர ஏனைய பயன்பாட்டிற்கு உறைகிணறுகள் அமைப்பது தடை செய்யப்பட்டுள்ளது. விதிமுறைகளை மீறி ஆற்றில் உறைகிணறு அமைத்து தண்ணீர் திருட்டு நடைபெறுவது குறித்து தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. இத்தகைய செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் ஆட்சியர்.

**களக்காடு வட்டாரத்தில் தோட்டக்கலை பயிர்களுக்கு மானியம்**

First Published : 23 Jun 2010 11:11:14 AM IST

களக்காடு, ஜூன் 22: களக்காடு வட்டாரத்தில் தோட்டக்கலைத்துறை மூலம் தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. நீராதாரங்கள் அமைக்க 65 சதவீத மானியம் அளிக்கப்படுகிறது.

÷இது குறித்து களக்காடு தோட்டக்கலை உதவி இயக்குனர் எஸ். சுப்புலட்சுமி திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

÷களக்காடு வட்டாரத்தில் வாழை முக்கியப் பயிராக 2000 ஹெக்டேர் பரப்பில் பயிரிடப்படுகிறது. இதில் நேந்திரன், ரோபஸ்டா, செவ்வாழை போன்ற ரகங்களின் சாகுபடியை ஊக்குவிப்பதற்காக தோட்டக்கலைத்துறை மூலம் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் மானியம் வழங்கப்பட உள்ளது. ÷இதற்காக, வாழை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு இடுபொருள்களும் மானியத்தில் வழங்கப்படுகிறது. ஜூன், ஜூலை மாதத்தில் நேந்திரன், ரோபஸ்டா, செவ்வாழை, ரஸ்தாளி போன்ற வாழை ரகங்களை நடவுசெய்யும் விவசாயிகள் இந்த மானியத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

÷களக்காடு வட்டாரத்தில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் மூலம் பல ஆண்டு பலன் தரக்கூடிய பழப்பயிரான மா, நெல்லி போன்றவை சாகுபடி செய்வதற்காக மானிய விலையில் பழ மரக்கன்றுகள் மற்றும் அதற்கான இடுபொருள்கள் வழங்கப்பட உள்ளன. இவற்றை சிறு மற்றும்

குறு விவசாயிகள் வாங்கிப் பயன்பெறலாம். ÷தோட்டக்கலை பயிர்கள் சாகுபடியை அதிகரிக்க நீர் ஆதாரங்கள் உருவாக்குவதற்கு மானிய உதவியும், சொட்டுநீர் பாசனம் அமைப்பதற்கு 65 சதவீத மானியமும் வழங்கப்படுகிறது. மானியம் பெற விரும்பும் விவசாயிகள் களக்காடு வேளாண்மை விரிவாக்க மையம் அருகில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு தங்கள் பெயரை பதிவு செய்து பயன்பெறலாம் என்றார் அவர்.

**தமிழகத்தில் செம்மை நெல் சாகுபடி சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது: கஸ்தூரிரங்கன்**

First Published : 24 Jun 2010 08:36:34 AM IST

பொன்னேரி, ஜூன் 23: தமிழகத்தில் செம்மை நெல் சாகுபடி திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது என மத்திய திட்டக்குழு உறுப்பினர் கஸ்தூரிரங்கன் கூறினார்.
÷தமிழகத்தில் இயங்கும் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழக மையங்கள், மாநில அரசின் வேளாண்மை மற்றும் கால்நடைத் துறைகளில் நடைபெற்று வரும் பணிகள் குறித்து மத்திய திட்டக்குழு உறுப்பினர் கே.கஸ்தூரிரங்கன் சென்னையில் செவ்வாய்கிழமை ஆய்வு மேற்கொண்டு அதிகாரிகளிடம் ஆலோசனை செய்தார்.
÷முன்னதாக பொன்னேரி தாலுகாவில் உள்ள அத்திப்பேடு கிராமத்துக்கு வந்த அவர், அங்கு நிலங்களில் ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் செம்மை நெல் சாகுபடி மூலம் பயிரிடப்பட்டிருந்த பயிர்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் வேளாண்மை துறை அதிகாரிகள் மற்றும் அப்பகுதி விவசாயிகளிடம் செம்மை நெல் சாகுபடி குறித்தும் அதன் மூலம் ஏக்கருக்கு நெல் எவ்வளவு விளைகிறது எனவும் கேட்டறிந்தார்.
÷பிறகு அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், தமிழகத்தில் செம்மை நெல் சாகுபடி திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது அதை பார்வையிட்டதில் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். மேலும் இத்திட்டத்துக்கு தேவையான நிதியை மத்திய அரசிடம் பெற்றுத்தருவதற்கான முயற்சியை மேற்கொள்வேன் என்றார்.
÷உணவு உற்பத்தி ஆணையர் மற்றும் செயலர் நந்தகிஷோர், மாதவரம் பால்பண்ணை கல்வி விரிவாக்க இயக்குநர் முனைவர் து.கதிரேசன் மற்றும் வேளாண் துறை உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.

**லாபம் தரும் இயற்கை ஸ்ட்ரூவைட் உரம்**

First Published : 24 Jun 2010 12:54:34 AM IST



சிதம்பரம், ஜூன் 23: தமிழக வாழை சாகுபடி விவசாயிகள் சில ஆண்டுகளாக பொருளாதார சவால்களை சந்தித்து வருகின்றனர்.
வேளாண் இடுபொருள்களின் அதிகப்படியான விலை உயர்வு, பெருமழை, வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்கள் காரணமாக வாழை மரங்கள் ஒடிந்து விடுதல் போன்ற காரணங்களால் கடுமையான உற்பத்தி இழப்புகள், பொருளாதாரச் சரிவுகளை சந்தித்து வருகின்றனர்.
வாழை சாகுபடியில் அதிகப்படியாக செயற்கை உரங்கள் பயன்படுத்தப்படுவதாலும், பூச்சி மற்றும் நோய் தாக்குதல்களையும் சந்திக்கின்றனர்.
இத்தகைய நடைமுறைச் சூழலில் குறைந்த செலவில் இயற்கை முறையில் அதிக லாபம் பெற்றுத் தரும் புதிய வாழை சாகுபடி முறைகள் பற்றி தமிழக விவசாயிகள் தெரிந்து கொள்வது அவசியம்.
ஸ்ட்ரூவைட் உரம்: வாழை சாகுபடியில் பல நடைமுறை சிக்கல்களுக்கு எளிதான தீர்வுகளை இயற்கை ஸ்ட்ரூவைட் உரம் தருகிறது.
மனிதச் சிறுநீர் மற்றும் மெக்னீசியம் கலந்து தயாரிக்கப்படும் ஸ்ட்ரூவைட் உரத்தை விவசாயிகள் தங்களின் வாழைத் தோட்டத்தில் பயன்படுத்தும் போது செயற்கை உரமிடுதல் பாதிப்புகளை தடுப்பதுடன் பூச்சி மற்றும் நோய் தாக்குதலையும் குறைக்கிறது. வாடல் நோயால் ஏற்படும் உற்பத்தி இழப்புகள் வாழை சாகுபடியில் தடுக்கப்படுகிறது.
ஸ்ட்ரூவைட் உரத்தை பயன்படுத்தும் போது வாழை மரத்துக்கு தேவையான தழைச்சத்து மற்றும் மணிச்சத்து எளிதாக கிடைக்கிறது. எனவே விவசாயிகள் தங்களின் வாழைக்குத் தேவையான அளவு சாம்பல் சத்தை ஸ்ட்ரூவைட் உரத்துடன் கலந்து சாகுபடி பணிகளுக்கு பயன்படுத்தலாம்.
திருச்சியில் உள்ள தேசிய வாழை ஆராய்ச்சி நிறுவனம் இந்த ஸ்ட்ரூவைட் உரத்தை உருவாக்கியது. தற்போது பரிசோதனையில் உள்ள நிலையில் இந்த ஸ்ட்ரூவைட் உரங்கள் திருச்சியில் உள்ள தனியார் வேளாண் இடுபொருள்கள் கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது.

மேலும் உலகத்தின் பல நாடுகளில் வாழை, பூக்கள், பழங்கள் மற்றும் காய்கறிகள் சாகுபடியில் ஸ்ட்ரூவைட் இயற்கை உரம் அதிகளவில் வெற்றிகரமாக பயன்படுத்தப்பட்டு சிறு மற்றும் குறு விவசாயிகள் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படச் செய்துள்ளது.

பிற பயன்கள்: செயற்கை உரங்களைப் போல் மண், நீர் மற்றும் இயற்கை வளங்களில் பாதிப்பு ஏற்படச் செய்யாது.
விவசாயிகள் குறைந்த செலவில் சாகுபடிப் பணிகளை மேற்கொண்டு அதிக லாபம் பெற முடியும்.
தமிழகத்தின் சிறு மற்றும் குறு விவசாயிகள், பண்ணை மகளிர், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், விவசாய சங்கங்கள் வாழை சாகுபடியில் அதிக உற்பத்தி, உற்பத்தி திறன் மற்றும் மகசூல் பெற இயற்கை ஸ்ட்ரூவைட் பயன்படுத்தி அதிக லாபம் பெறலாம் என்கிறார் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்கத்துறை விரிவுரையாளர் தி.ராஜ்பிரவீன்.

**நெல்லுக்கு தேவை காய்ச்சலும், பாய்ச்சலும்**

First Published : 24 Jun 2010 12:49:41 AM IST



புதுச்சேரி ஜூன் 23: புதுச்சேரியில் நெல் 3 போகங்கள் பயிரிடப்படுகின்றன. சொர்ணவாரி, சம்பா, நவரை.
சொர்ணவாரி, நவரை குறுகிய கால பருவம். அதாவது மூன்றரை மாதம். சம்பா நீண்டகால பருவம். ஐந்தரை மாதம். சொர்ணவாரி பருவத்தில் வெயில் அதிகமாக இருக்கும், சம்பா பருவத்தில் வெயில், மழை, பனியும் இருக்கும். நவரை பருவத்தில் பனி, வெயில் இருக்கும்.
ஒவ்வொரு பருவங்களிலும் ஒவ்வொரு சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப நெல் வளருகிறது.
நெல் பயிரில் 2.5 செ.மீ தண்ணீர் இருந்தால் போதும். 2 நாள் தண்ணீர் பாய்ச்சினால் 2 நாள் தண்ணீர் தேவையில்லை. நெல்லுக்கு காய்ச்சலும், பாய்ச்சலும் இருக்க வேண்டும்.
ஒற்றை நெல் சாகுபடி: ஒற்றை நெல் சாகுபடி முறை சிறப்பானது. இதில் நெல் பயிர் பயன்படுத்தும் அளவு குறைக்கப்படுகிறது. 3 கிலோ நெல் விதை இருந்தால் 8 சென்ட் நாற்றங்கால் தயார் செய்து அதிலிருந்து ஓர் ஏக்கர் நடவு செய்துவிடலாம்.
சாதாரணமாக நாற்று பிடுங்கி நடுவதற்கு 25 முதல் 30 நாள் பிடிக்கும். ஒற்றை நெல் நாற்று நடவு முறையில் 13 முதல் 15 நாள் இருந்தால் போதும். இந்த முறையில் ஒரு நாற்று வைத்தால் போதும். மகசூல் அதிகமாக இருக்கும்.

உரம் போடுவது தழைச் சத்து,மணிச் சத்து, சாம்பல் சத்து இருக்க வேண்டும். இதற்காக யூரியா அளவை 5 பாகங்களாகப் பிரிக்க வேண்டும். ஒரு பாகம் நடவிலும் மீதி 4 பாகம் களை எடுத்தப் பிறகு ஒவ்வொரு 15 நாள் இடையில் போட வேண்டும்.

பூச்சி தாக்குதலைச் சமாளிப்பது குறித்து புதுச்சேரி பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தின் பூச்சியியல் நிபுணர் என். விஜயகுமார் கூறியது: நடவு வயலில் குருத்துப் பூச்சி, இலை சுருட்டுப் புழு, இலை பிணைக்கும் புழு, மஞ்சள் கம்பளிப் புழு, பச்சை கொம்பு புழு, படைப் புழு போன்றவை தாக்கலாம்.

இதைக் கட்டுப்படுத்த சுற்றுச்சூழல் சார்ந்த ஒருங்கிணைந்த மேலாண்மை முறையில் ஓர் ஏக்கருக்கு ஒரு விளக்குப் பொறி, 5 இனக்கவர்ச்சி பொறி, 25 டி வடிவ குச்சிகள் ஆகியவற்றை ஓர் ஏக்கரில் வைக்க வேண்டும். 2 ஒட்டுண்ணி குளவி அட்டைகளை ஓர் ஏக்கருக்கு 2 சிசி வீதம் நடவு நட்ட 30, 37, 44, 51 நாள்களில் கட்ட வேண்டும்.

நட்ட 40- 55 நாள் வரை இலையுண்ணும் புழுக்கள் மற்றும் முட்டைக் கொம்பு வெட்டுக்கிளிகளைக் கட்டுப்படுத்த ஓர் ஏக்கருக்கு 250 மி.லி. வேப்ப எண்ணைய், 100 கிராம் காதி சோப்பு இரண்டையும் கலந்து தெளிக்க வேண்டும்.

மேலும் சாணிப்பால் திரவத்தையும் தெளிக்கலாம். வளர்ந்த புழுக்களைக் கட்டுப்படுத்த ஓர் ஏக்கருக்கு 1 கிலோ பெவேரியா பேசியானா என்ற  மருந்தை 200 லிட்டர் நீரில் கரைத்து அதிகாலை நேரத்தில் தெளிப்பதால் புழுக்களின் மீது நோய் உருவாகி இறக்கும்.

புழுக்கள் தாக்குதல் அதிகமாக இருந்தால் பேசில்லஸ் துருஞ்சியான்சிஸ் (பிடி) என்ற  பாக்டீரிய மருந்தை ஓர் ஏக்கருக்கு 250 கிலோ தெளித்தும் கட்டுப்படுத்தலாம். நெல்லில் கதிர் வரும்போது கதிர் நாவாய் பூச்சி கதிரைப் பாதிக்கும். அப்போது அந்த வயலில் இருந்து ஓர் நாற்றம் வரும். அந்த நேரத்தில் ஓர் ஏக்கருக்கு 100 மி.லி. வேப்ப எண்ணெய் கதிரில் மட்டும் படுமாறு தெளிக்க வேண்டும்.

கதிர் வரும் நேரத்தில் டி வடிவ குச்சியை எடுத்துவிட வேண்டும். இல்லையென்றால் காக்கை, குருவி அமர்ந்து கதிரைச் சாப்பிடும். நெல் வேரைத் தாக்கும் நூல் புழுக்கள், வண்டுகளைக் கட்டுப்படுத்த ஓர் ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம் புண்ணாக்கு இட வேண்டும். இதற்கான ஆலோசனைகளும், நடவு இயந்திரங்கள் வாடகைக்கும் வேளாண் அறிவியல் நிலையத்தில் கிடைக்கும் என்றார்.

தினமலர்

**சொட்டு நீர் பாசன கடன் கலந்தாய்வுக் கூட்டம்**

விழுப்புரம்:தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் சொட்டு நீர் பாசன கடன் வழங்குவது தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம் நடக்கிறது.மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் ரேணுகாம் பாள் விடுத்துள்ள செய்திக் குறிப்பு:

விழுப்புரம் மாவட்டத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் 2010 - 2011 ஆண்டிற்கு சொட்டு நீர் பாசன கடன் வழங்குவது குறித்த கலந் தாய்வுக் கூட்டம் நடக்கிறது. இதில் திருக்கோவிலூர் வட்டத்தை சேர்ந்தவர்களுக்கு வரும் 26ம் தேதி காலை 10 மணியளவிலும், உளுந்தூர்பேட்டை வட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு மதியம் 3 மணியளவிலும் திருக்கோவிலூர் நகர வங்கி வளாகத் தில் ஆலோசனைக் கூட் டம் நடக்கிறது.

வரும் 28ம் தேதி காலை சங்கராபுரம் வட்டத் தைச் சேர்ந்த விவசாயிகளுக்கும், கள்ளக்குறிச்சி வட் டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு மதியம் 3 மணியளவிலும் கள்ளக்குறிச்சி கூட் டுறவு விற்பனை சங்கத்தில் ஆலோசனைக் கூட்டம் நடக்கிறது.

**நடமாடும் மையம் இன்றி விவசாயிகள் தவிப்பு! மண் பரிசோதனை முடிவுக்கு காத்திருப்பு**

காஞ்சிபுரம் : காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடமாடும் மண் பரிசோதனை வாகனம் இல்லாததால் மண் பரிசோதனை முடிவிற்காக விவசாயிகள் நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்ட மக்களின் முக்கியத் தொழில் விவசாயம். கடந்த சில வருடங்களாக போதிய மழை இல்லை. ஏரிகளில் நீர் இல்லாததால் விவசாயிகள் கிணற்று நீர் மூலம், விவசாயம் செய்து வருகின்றனர். இதனால் பலர் விவசாயத்தை கைவிட்டனர். இந்நிலையில் விவசாயத்தில் தொழில்நுட்பத்தை புகுத்தவும், விவசாயத்தை லாபகரமான தொழிலாக மாற்றவும், வேளாண்மைத்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

விவசாயிகளுக்கு நிலத்தில் உள்ள மண்ணின் தன்மையை ஆராய்ந்து, அந்நிலத்தில் எந்த வகை பயிர்களை பயிரிட்டால் அதிக லாபம் பெறலாமென்பதை தெரிவிப்பதற்காக நடமாடும் மண் பரிசோதனை மையத்தை துவக்கினர். நடமாடும் மண் பரிசோதனை வாகனத்தில் வேளாண்

அலுவலர்கள், மண் பரிசோதனை செய்யும் பரிசோதகர், உதவியாளர் ஆகியோர் கிராமங்களுக்கு சென்றனர்.

அங்கு விவசாயிகளின் நிலங்களில் மண் எடுத்து பரிசோதனை செய்தனர். எந்த வகையான பயிர்களை பயிரிடலாம். எந்த உரங்கள், பூச்சி மருந்துகளை பயன்படுத்தலாமென்பது குறித்து விவசாயிகளுக்கு அக்குழுவினர் விளக்கினர். இதன் மூலம் விவசாயிகள் பெரும் பயனடைந்தனர். கடந்த 2008ம் ஆண்டு காஞ்சிபுரத்தில் மண் பரிசோதனை மையம் துவக்கப்பட்டது. அதை தொடர்ந்து நடமாடும் மண் பரிசோதனை வாகனம் திருவள்ளூர் மாவட்டத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

தற்போது காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் மண் பரிசோதனை செய்வதற்கு காஞ்சிபுரம் வர வேண்டியுள்ளது. விவசாயிகள் அலைவதை தவிர்க்க, அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களில் மண் மாதிரி கொடுத்தால், வேளாண் அலுவலர்கள் அதை பரிசோதனைக்கு அனுப்பி முடிவை தெரிவிப்பர் என அறிவிக்கப்பட்டது.

ஆனால் வேளாண் விரிவாக்க மையங்களில், விவசாயிகள் மண் மாதிரியை கொடுத்தால் முடிவு தெரிவிக்க பல நாட்கள் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது. வேளாண்மை விரிவாக்க மையங்களில் உள்ள அலுவலர்கள் ஒரு வாரத்திற்கு பின்தான் மாதிரியை சோதனைக்கு அனுப்புவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இப்பிரச்சனைக்கு தீர்வு காண காஞ்சிபுரம் மாவட்டத்தில் மீண்டும் நடமாடும் மண் பரிசோதனை மையத்தை துவக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்**

திருவள்ளூர் : திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நாளை (25ம் தேதி) மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெற உள்ளது.

இதில் மாவட்டத்தில் உள்ள வேளாண்மை, வருவாய், மின் வாரியம், கூட்டுறவு, பொதுப்பணி, வேளாண்மை பொறியியல், மீன் வளம், கால்நடை, மண்வள பாதுகாப்பு உட்பட பல துறைகளை சேர்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டு விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர். எனவே மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு தங்களது குறைகளுக்கு தீர்வு காணலாம்.

பருவ மழை ஏமாற்றுவதால் விவசாயிகள் பெரும் கலக்கம்

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை போக்குகாட்டி ஏமாற்றி வருவதால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் 686.89 மி.மீ., மழை பெய்வது வழக்கம். ஜூன் முதல் செப்டம்பர் வரையான தென்மேற்கு பருவமழை மற்றும் அக்டோபர் முதல் டிசம்பர் வரையான வடகிழக்கு பருவமழை ஆகிய மழைகளை அடிப்படையாக கொண்டு விவசாயம் செய்யப்படுகிறது.

ஆண்டுதோறும் தென்மேற்கு பருவமழை பெருமளவில் கைகொடுக்கும். குறிப்பாக காவிரி படுகை பகுதியில் தென்மேற்கு பருவமழை காரணமாக நீர் நிலைகளில் நீர் ஆதாரங்கள் பெரும் அளவில் உயரும். கர்நாடகா மாநிலம் காவிரி படுகை பகுதியில் பெய்யும் மழை மூலம் தர்மபுரி மாவட்டத்தில் காவிரி மற்றும் அதன் துணை ஆறுகள் மற்றும் தென்பெண்ணையாற்று படுகை மூலம் நீர் வரத்து அதிகரித்து ஏரி, குளம், குட்டைகளில் நீர் நிரம்பும். வடகிழக்கு பருவமழை காலங்களில் சின்னாறு, வாணியாறு ஆகிய ஆற்றுப்படுகை பகுதியில் உள்ள நீர் ஆதாரங்கள் மூலம் நீர் நிலைகளில் நீர் தேங்கும் . 60 சதவீதம் நீர் தேக்கம் தென்மேற்கு பருவமழையை அடிப்படையாக கொண்டு இருக்கும். 40 சதவீதம் வடகிழக்கு பருவமழையை அடிப்படையாக இருக்கும். கடந்த 2005ம் ஆண்டுக்கு பின் தர்மபுரி மாவட்டத்தில் குறிப்பிட்டு சொல்லும்படியாக மழை அளவு இல்லாததால் விவசாயத்தில் தொடர் நஷ்டம் ஏற்படுகிறது.

மாவட்டத்தில் சாகுபடியாளர்கள் 36 சதவீதம் பேரும், வேளாண் தொழிலாளர்கள் 23 சதவீதம் பேரும் விவசாயத்தை பிரதானமாக கொண்டு தொழில் செய்து வருகின்றனர். எந்தாண்டும் இல்லாத அளவுக்கு கோடை வெயில் இந்தாண்டு தர்மபுரி மாவட்டத்தில் வாட்டி எடுத்ததால், நீர் ஆதாரங்கள் அனைத்தும் வறண்டான, இறவை பாசன பகுதிகளிலும் நிலத்தடி நீர் மட்டம் கேள்விக்குறியானது. இறவை பாசன விவசாயிகள் பலர் கிணறுகளை தூர் வாரியும் குறிப்பிட்டு சொல்லும்படியாக தண்ணீர் இல்லாமல் ருந்தால், கோடை சாகுபடியில் பெரும் அளவில் விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியது. தற்போது, குறுவை சாகுபடிக்கான விவசாயிகள் தென்மேற்கு பருவமழையை எதிர்பார்த்த நிலையில் ஜூன் முதல் வாரத்தில் மாவட்டத்தில் பரவலான மழை பெய்தது. இதனால், இந்தாண்டு பருவமழை கைகொடுக்கும் என்ற எதிர்பார்ப்பு விவசாயிகளுக்கு ஏற்பட்டது.

ஆனால், தொடர்ந்து மழையின்றி வெயில் உக்கிரம் தணியாத நிலையே நீடித்து வருகிறது. கடந்த இரு நாட்களாக மாவட்டத்தில் பல இடங்களில் பலத்த மழைக்கான அறிகுறிகள் தென்பட்ட போதும், காற்று, இடி காரணமாக லேசான சாரல் மழையோடு நின்று போனது. கடந்த 19ம் தேதி பாலக்கோடு மற்றும் மாரண்டஹள்ளி பகுதியில் மட்டும் பரவலான மழை பெய்தது. தொடர்ந்து

பருவமழைக்கான அறிகுறி இருந்த போதும், காற்றால் லேசான மழை மட்டும் பெய்து வருவதால், விவசாயிகள் மிகுந்த கவலை அடைந்துள்ளனர். பல இடங்களில் குறுவை நெல் சாகுபடிக்கு விவசாயிகள் வேளாண் பணிகளை முடுக்கி விட்ட நிலையில் பருவ மழை ஏமாற்றி வருவது விவசாயிகளிடையே கலக்கத்தை ஏற்படுத்தி வருகிறது.

**120 ஏக்கரில் கருவை மரத்தை வெட்ட மக்கள் எதிர்ப்பு: ஜூன் 25ல் மறியல்?**

வேதாரண்யம்: நாகை மாவட்டம் வேதாரண்யம் அடுத்த ஆயக்காரன்புலம் நான்காம்சேத்தி கிராமத்தில் ஏலம் விடப்பட்ட கருவை மரங்களை வெட்ட கிராம மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். வேதாரண்யம் அடுத்த ஆயக்காரன்புலம் நான்காம் சேத்தி கிராமம் கடற்கரை உள்ள பகுதியாகும். கிராமத்து எல்லையில் 120 ஏக்கரில் கருவை மரங்கள் வளர்ந்துள்ளன. இம்மரங்கள் கடலில் ஏற்படும் சுனாமி, புயல், சீற்றம் போன்றவற்றில் இருந்து மக்களை பாதுகாக்கும் வகையில் இயற்கையாக அமைந்துள்ளது. கடந்த சுனாமியின்போதுகூட இந்த கருவை மரத்தால்தான் இக்கிராமம் முழுவதும் பாதுகாக்கப்பட்டது. இந்நிலையில், இம்மரங்களை கடந்த 19ம் தேதி பஞ்சாயத்து நிர்வாகம் மூலம் 3.50 லட்சம் ரூபாய்க்கு ஏலம் விட்டு வெட்டிவிட முடிவு செய்யப்பட்டது. கருவை மரத்தின் மொத்த மதிப்பை விட குறைவான தொகைக்கு ஏலம்விடப்பட்டதாக மக்கள் குற்றம்சாட்டினர். இதற்கிடையில், இந்த கருவை மரங்களை வெட்டினால் கிராமத்துக்கு பாதிப்பு ஏற்படுவதுடன், உப்பு காற்று பட்டு ங்குள்ள நீர் நிலைகள் உப்பு தன்மை உள்ளதாக மாறிவிடும் என்றும், கிராமத்துக்கு பாதுகாப்பாக உள்ள மரங்களை வெட்டக்கூடாது என கிராம மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இந்த எதிர்ப்பு குறித்து நாகை கலெக்டர் முனியநாதனிடம் மக்கள் குறைதீர் கூட்டத்தில் கிராம மக்கள் சார்பில் செல்வராஜன் என்பவர் மனுக்கொடுத்து இந்த ஏலத்தை ரத்து செய்ய வேண்டும், எனக்கோரினார். ஜூன் 25ம் தேதி வேதாரண்யம் தாசில்தார் அலுவலகம் முன் மறியலில் ஈடுபடப்போவதாக, கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

**வெங்காயத்தில் நோய் தாக்குதல்: கட்டுப்படுத்த யோசனை**

நாமக்கல்: "வெங்காய சாகுபடியில் நோய் தாக்குதலை கட்டுப்படுத்த பயிர் பாதுகாப்பு முறையை கடைபிடிக்க வேண்டும்' என, புதுச்சத்திரம் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் சந்திரன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: நாமக்கல் அடுத்த புதுச்சத்திரம் வட்டாரத்தில் ராமநாய்க்கன்பட்டி, கடந்தப்பட்டி, பாச்சல், கதிராநல்லூர் மற்றும் தாத்தையங்கார்பட்டி ஆகிய கிராமங்களில் 20 ஏக்கர் பரப்பில் வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது, வெங்காய பயிரில் இலைப்பேன் மற்றும் இலைக்கருகல் நோய் தாக்குதல் காணப்படுகிறது. அதை கட்டுப்படுத்த பயிர்பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டும். தற்போது நிலவி வரும்

தட்பவெட்ப நிலையினால், இலைப்பேன் தாக்குதல் அதிகமாக இருக்கும். பூச்சிகள் இலைகளின் சாற்றை உறிஞ்சுவதால் வெள்ளை நிற புள்ளிகள் காணப்படும். விதை நடவு செய்த 30வது நாளில் போரேட் 10ஜி குருணை மருந்து 4 கிலோ அல்லது கார்பொபியூரான் 10 கிலோ ஏக்கருக்கு என்ற அளவில் இடவும். வேப்பம்புண்ணாக்கு இடுவதன் மூலமும் தாக்குதலை குறைக்கலாம். மீதைல் ஒடெமடான் 2 மில்லி ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து பத்து, பன்னிரெண்டு நாள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்கவும். மண்ணில் அதிக அளவு ஈரப்பதம், மழைநீர் தேங்குதல் நிலையில் இலைக்கருகல் நோய் தாக்குதல் அதிகமாக இருக்கும். நுனி இலைகள் உலர்ந்து கருகி இருக்கும். அதில் வெண் புள்ளிகள் மற்றும் வெளிறிய ஓரங்களுடன் கருநீல நிறப்புள்ளிகள் இருக்கும். அதை தடுக்க நிலத்தில் தேங்கும் நீரை உடன் வடித்து விடவேண்டும். மேங்கோசெட் 2 கிராம் ஒரு லிட்டர் தண்ணீர் என்ற வீதத்தில் கலந்து தெளிக்க வேண்டும். மேலும், இது தொடர்பான விபரங்கள் அறிய புதுச்சத்திரம் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை அணுகலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மானிய விலையில் விதை வினியோகம்**

சிங்கம்புணரி: சிங்கம்புணரி விவசாய வளர்ச்சி மையத்தில், எண்ணெய் வித்து பெருக்கு திட்டத்தில், டி.எம்.வி. நிலக்கடலை விதை, வம்பன்- 3 உளுந்து விதை வழங்கப்படுகிறது. ஒரு கிலோ 12 ரூபாய் மானிய விலையில் கிடைக்கும். இயற்கை மூலிகை பூச்சி விரட்டி வசம்பு பவுடர் 50 சதவிகித மானியத்திலும்; விதை கிராம திட்டத்தில் தானிய சேமிப்பு கதிர் 25 சதவீத மானிய விலையில் வழங்கப்படும். பெய்துள்ள மழையை பயன்படுத்தி கோடை உழவு செய்யுமாறு, விவசாய உதவி இயக்குனர் தொல்காப்பியன் தெரிவித்தார்.

**கால்நடை ஆராய்ச்சி மையம்: பயிற்சி முகாமுக்கு ஏற்பாடு**

கரூர்: கரூர் அருகே பண்டுதகாரன்புதூரில் செயல்படும் கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் வரும் 29ம் தேதி "லாபகரமான முறையில் கறவை மாட்டு பண்ணையம்' என்ற தலைப்பில் ஒருநாள் பயிற்சி முகாம் நடக்கிறது. பயிற்சியில் கறவை மாடு வளர்ப்பு, பண்ணை வீட்டமைப்பு, தீவன மேலாண்மை, நோய் மற்றும் அவற்றை தடுக்கும் முறைகள், விற்பனை உத்திகள் மற்றும் பண்ணைப் பொருளாதாரம் குறித்த தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்டு மற்றும் களப்பயிற்சியும் வழங்கப்படுகிறது. "பயிற்சியில் பங்கேற்க விருப்பமுள்ளவர்கள் காலை பத்து மணிக்கு பயிற்சி மைய வளாகத்துக்கு நேரில் வர வேண்டும். மேலும், 04324- 294335 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்துக் கொள்ளலாம்' என மைய இணைப்பேராசிரியர் செந்தில்வேல் அறிவித்துள்ளார்.

**பருவமழையை எதிர்பார்த்து மாவட்ட விவசாயிகள் தவம் !இயற்கையின் வறட்சி கரத்துக்கு விடை வேண்டும்**

ராமநாதபுரம்: பருவமழை தொடங்கியுள்ள நிலையில், மழை இன்னும் தீவிரம் அடையாமலிருப்பதால் விவசாயிகள் தீவிர எதிர்பார்ப்பில் உள்ளனர். வறட்சிக்கு பெயர் போன ராமநாதபுரத்தில் விவசாயம் கடந்த சில ஆண்டுகளாக படுதோல்வியை சந்தித்து வருகிறது. செயற்கை குறைபாடுகள் ஒரு புறமிருந்தாலும், இயற்கையின் பாரபட்சமும் இதில் முக்கிய பங்கு வகிக்கிறது. போதிய மழையில்லாமலும், அறுவடை காலத்தில் மழை கொட்டியும் கடந்த ஆண்டுகளில் விவசாயம் பொய்த்து போன சம்பவங்கள் அதிகம் நடந்துள்ளன. இவற்றிலிருந்து பிழைக்கும் போது ஏதேனும் நோய் தாக்குதல் ஏற்பட்டு பயிர்கள் நாசமாகின்றன. தொடர்ந்து வரும் இந்நிலையே, மாவட்டம் "வறட்சி' பட்டம் பெற காரணமானது. உலகில் பல்வேறு பகுதிகளிலிருந்தும், இங்கு வந்து நீராடி பாவத்தை கழித்து செல்கின்றனர். ஆனால், இங்குள்ள விவசாயிகள் என்ன சாபம் பெற்றார்களோ, தொடர்ந்து விவசாயம் பொய்த்து வருகிறது. தென்மாவட்டத்தில் கடந்த இருவாரங்களாக அனைத்து மாவட்டங்களிலும் நல்ல மழை பெய்து வருகிறது. இதில் ராமநாதபுரம் மாவட்டம் மட்டும் விதிவிலக்கு. நேற்று முன்தினம் இரவில் யாரும் எதிர்பாராத நேரத்தில் சிறிது நேரம் மழை பெய்தது. அண்டை மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் இங்கு பெய்த மழையின் அளவு மிகவும் குறைவே. பருவ மழை தொடங்கியுள்ள நிலையில் அதற்கான அறிகுறிகள் கூட ராமநாதபுரம் பகுதியில் தென்படவில்லை. இன்னும் காலங்கள் இருக்கிறது என்றாலும், ஆரம்பமே அமர்க்களமாய் இருந்தால் தானே, முடிவு சுபமாக இருக்கும். உழவுப்பணிகளை பொறுத்தவரை பருவமழைக்கு தேவையான அளவு விவசாயிகள் தரப்பு செய்து முடித்துவிட்டனர். புழுதி எடுக்கும் உளவுப்பணிகள் நிறைவு பெற்றுள்ள நிலையில், அவற்றின் மீது மழைத்துளி விழவேண்டியது தான் பாக்கி. கடந்த ஆண்டுகளை போல இம்முறையும் சோகமான சூழல் ஏற்பட்டால் , விவசாயத்தை மறக்க வேண்டிய கட்டாயத்தில் இம்மாவட்ட மக்கள் தள்ளப்படுவார்கள் என்பதால், இயற்கை அன்னை மனம் வைத்து, பூமியை மகிழ்விக்க "மாரி'யை தர வேண்டும் .குறைந்து வரும் மரங்கள் கடலோர மாவட்டமாக இருந்தும் மழை பொழிவு இங்கு குறைவாக இருக்க பல்வேறு காரணங்கள் உள்ளன. குறிப்பாக மரங்களின் எண்ணிக்கை ராமநாதபுரம் மாவட்டத்தில் அதிகம் உள்ளது. இதனால் வெப்பம் அதிகரித்து, புவி இன்னும் வறட்சியை சந்திக்கும். மாவட்டத்தின் அனைத்து பகுதியிலும் மரங்களை வளர்த்து , அதன் மூலம் இயற்கைக்கு சாதகமான சூழலை நாம் உருவாக்கி கொள்ளலாம். அதே போல கருவேல மரங்களின் எண்ணிக்கை இங்கு போல வேறெங்கு இல்லை. நிலத்தடி நீருக்கு உலை வைக்கும் கருவேல மரங்களை ஒரே நேரத்தில் அழிக்க வேண்டியதும் அவசியமாகும். இதை மாவட்ட நிர்வாகம் கவனத்தில் கொண்டு, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*அடுத்த இரண்டு ஆண்டுகளில் உணவு தானியங்கள் உற்பத்தி 26 கோடி டன்னாக அதிகரிக்கும்*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*அடுத்த இரண்டு ஆண்டுகளில், நம் நாட்டில் உணவு தானியங்கள் உற்பத்தி 26 கோடி டன்னாக அதிகரிக்கும் என தேசிய பயன்பாட்டு பொருளியல் குழு (என்.சி.ஏ.இ.ஆர்) மதிப்பீடு செய்துள்ளது. வரும் 2020–ஆம் ஆண்டுக்குள் இது வியக்கத்தக்க வகையில் 29.50 கோடி டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

தேவைப்பாடு

*கடந்த 2008–09–ஆம் நிதி ஆண்டில், உள்நாட்டில் உணவு தானியங்களுக்கான தேவைப்பாடு 20.70 கோடி டன்னாக இருந்தது. இந்நிலையில், பொருளாதார வளர்ச்சியை பொறுத்து, அடுத்த இரண்டு ஆண்டுகளில் 22 கோடி டன்னாகவும், 2020–ஆம் ஆண்டுக்குள் 25 கோடி டன்னாகவும் உயரும் என கணிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கடந்த 25 ஆண்டுகளாக இந்தியாவில் தானியங்கள் உற்பத்தி சரிவடைந்து வருவதாக 'நாஸா' அமைப்பு தெரிவித்துள்ளது. அதேசமயம், கடந்த 2008–09–ஆம் நிதி ஆண்டில், உணவு தானியங்கள் உற்பத்தி 23.40 கோடி டன்னாக மிகவும் உயர்ந்து இருந்தது. இந்நிலையில், கடும் வறட்சி மற்றும் வெள்ளம் போன்றவற்றால், சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில், தானியங்கள் உற்பத்தி 6.8 சதவீதம் குறைந்து 21.80 கோடி டன்னாக சரிவடைந்தது. இதனையடுத்து, நாட்டில் உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 16 சதவீதத்தை தாண்டி உள்ளது. இதனால், சென்ற மே மாதத்தில், மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் அனைத்து பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 10.16 சதவீதமாக உயர்ந்தது.*

*இதனையடுத்து, உணவு தானியங்கள் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மத்திய அரசு, சென்ற சில தினங்களுக்கு முன், நெல், கோதுமை, பருப்பு வகைகளுக்கான குறைந்தபட்ச ஆதரவு*

விலையை உயர்த்தியது. இதனையடுத்து, ஜூன் மாதம் தொடங்கி, செப்டம்பர் மாதத்தில் நிறைவடையும் கரீஃப் பருவத்தில், பருப்பு வகைகள் பயிரிடும் பரப்பளவு 20 சதவீதம் வரை அதிகரிக்கும் என பருப்பு இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நெல் உற்பத்தி

அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளால், நாட்டின் வேளாண் உற்பத்தி வளர்ச்சியை 2 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக உயர்த்த முடியும் என பாரத பிரதமர் மன்மோகன்சிங் அண்மையில் தெரிவித்தார்.

நெல் உற்பத்தியில் இந்தியா உலக அளவில் இரண்டாவது இடத்தில் உள்ளது. நடப்பு 2010–11–ஆம் வேளாண் பருவத்தில், நம் நாட்டில், நெல் உற்பத்தி 10 கோடி டன்னாக உயர வாய்ப்புள்ளது என்று அனைத்திந்திய நெல் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் பிரசிடென்ட் விஜய் சேத்தியா கூறினார்.

வறட்சி

கடந்த 2008–09–ஆம் நிதி ஆண்டில், நாட்டின் வேளாண் உற்பத்தி வளர்ச்சி 1.6 சதவீதமாக இருந்தது. கடும் வறட்சியால் இது சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில், கடந்த ஐந்து ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 0.2 சதவீதமாக குறைந்தது. 11–வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2007–2012) வேளாண் உற்பத்தியில் 4 சதவீத வளர்ச்சி காண மத்திய அரசு இலக்கு நிர்ணயம் செய்துள்ளது. வேளாண் துறையில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதால், இந்த இலக்கை எட்ட முடியும் என நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

பருவமழை

இந்நிலையில், நடப்பு ஆண்டில், பருவமழை நன்றாக இருக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையமும், பல தனியார் வானிலை முன்னறிவிப்பு மையங்களும் தெரிவித்துள்ளன. தென் மேற்கு பருவமழையும் நன்றாக இருப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. இதனால், இவ்வாண்டில் உணவு தானியங்கள் உற்பத்தி நன்றாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் உணவு தானியங்கள் ஏற்றுமதி அடுத்த 10 ஆண்டுகளுக்குள் 6 கோடி டன்னாக உயரும் என மேற்கண்ட அமைப்பு மதிப்பீடு செய்துள்ளது.

இந்திய மக்கள் தொகையில் 60 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள் விவசாயம் மற்றும் அதனை சார்ந்த தொழில்களை நம்பி உள்ளனர். தொழில் துறை உற்பத்தி வளர்ச்சி காணும் அளவிற்கு, வேளாண் துறையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. எனவே, மத்திய, மாநில அரசுகள், வேளான் துறைக்கு முக்கியத்துவம் அளித்து, பல சலுகைகளை வழங்கினால், நம் நாட்டின் தானிய உற்பத்தி எதிர்பார்த்த அளவிற்கு அதிகரிக்கும் என வேளாண் துறையைச் சேர்ந்த பல ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இதனால், நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேம்படும் என்பதுடன், மக்களின் வாழ்க்கை தரமும் உயரும்.

## குன்னூரில் லாரி உரிமையாளர்கள் வேலை நிறுத்தம்: ரூ.35 கோடி மதிப்புள்ள தேயிலை தூள் தேக்கம்




குன்னூரில் லாரி உரிமையாளர்கள் வேலை நிறுத்தம் காரணமாக ஒரு குடோனில் தேங்கி உள்ள தேயிலை மூடைகளை படத்தில் காணலாம்.

*குன்னூர், ஜூன்.24–*

*குன்னூரில் லாரி உரிமையாளர்கள் வேலை நிறுத்தம் காரணமாக ரூ.35 கோடி மதிப்புள்ள தேயிலை தூள்கள் தேக்கம் அடைந்துள்ளன.*

*தேயிலை ஏல மையம்*

*நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள் குன்னூர் தேயிலை ஏல மையம் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. பின்னர் இந்த தேயிலை தூள் குன்னூரில் உள்ள குடோன் களில் வைக்கப்பட்டு வெளி மாநிலங்களுக்கும், ஏற்றுமதிக்காகவும் லாரிகள் மூலம் கொண்டு செல்லப் படுகிறது.*

*2 ஆண்டுகளுக்கு ஒரு முறை லாரி உரிமையாளர்கள் சங்கத்துக்கும், சாலை போக்குவரத்து சங்கத்துக்கும் வாடகை ஒப்பந்தம் செய்யப்படுகிறது. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட ஒப்பந்தத்துக்கு பிறகு பெட்ரோல், டீசல் விலை பல மடங்கு உயர்ந்து விட்டது. இதனால் லாரி வாடகையை அதிகரித்து தர வேண்டும் என்று லாரி உரிமையாளர்கள் கூறி வந்தனர்.*

*தேயிலை தூள் தேக்கம்*

*இதற்கு எந்தவித நடவ டிக்கையும் எடுக்காததால் லாரி உரிமையாளர்கள் லாரிகளை தேயிலை பாரம் ஏற்ற அனுப்பாமல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றன. இந்த வேலை நிறுத்தம் 2–வது நாளாக நேற்றும் நீடித்தது.*

*இதன் காரணமாக குன்னூரில் உள்ள தேயிலை குடோன்களில் சுமார் 70 லட்சம் கிலோ தேயிலை தூள் தேக்கம் அடைந்துள்ளது. இதன் மதிப்பு சுமார் ரூ.35 கோடி ஆகும்.*

*சிக்கல்*

*இது குறித்து சாலை போக்கு வரத்து சங்க செயலாளர் சேகர் கூறியதாவது:–*

*தேயிலை பாரம் ஏற்றும் லாரி உரிமையாளர்களின் வேலை நிறுத்ததால் ரூ.35 கோடி மதிப்பிலான தேயிலை தூள் தேக்கம் அடைந்துள்ளது. லாரி உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தை இன்னும் தொடங்கப்படவில்லை. கோவையில் உலகத்தமிழ் செம்மொழி மாநாடு நடைபெறுவதால், அரசு அதிகாரிகள் அங்கு சென்றுள்ளனர். இதனால் நடுநிலையாளர் இல்லாததால் பேச்சுவார்த்தை நடைபெறு வதில் சிக்கல் ஏற்பட்டு வருகிறது.*

*இவ்வாறு அவர் கூறினார்.*

## கொலக்கம்பை பகுதியில் உருளைக்கிழங்கு விளைச்சல் அமோகம்



கேத்தி பாலாடாவில் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ள உருளைக்கிழங்கு செடிகளை படத்தில் காணலாம்.

*கொலக்கம்பை, ஜூன்.24–*

*கொலக்கம்பை பகுதியில் உருளைக்கிழங்கு விளைச்சல் அமோகமாக உள்ளது.*

*அமோக விளைச்சல்*

*கொலக்கம்பை அருகே கேத்தி பாலாடா, சேலாஸ், ஓரநள்ளி, அதிகரட்டி பகுதி களில் உள்ள பெரும்பாலா னோர் மலை தோட்ட காய் கறிகளை பயிர் செய்து அதன் மூலம் வருமானம் ஈட்டி வருகின்றனர்.*

*தற்போது மேற்கண்ட பகுதி களில் உள்ள சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் தங்களின் நிலங்களில் உருளைக்கிழங்கு விவசாயம் செய்து வருகின்றனர். இதன் விளைச்சல் அமோகமாக கிடைத்துள்ளது. தொடர்ந்து அறுவடை செய்யும் உருளைக் கிழங்கை மொத்தமாக ஊட்டி, மேட்டுப்பாளையம் போன்ற பகுதிகளில் உள்ள காய்கறி மண்டிக்கு கொண்டு சென்று விற்பனை செய்து வருகின்றனர்.*

*பொருளாதார நெருக்கடி*

*இது குறித்து உருளைக் கிழங்கு விவசாயி ஒருவர் கூறியதாவது:–*

*நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு பச்சை தேயிலைக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டது. இதனால் இதனை நம்பியிருந்த சிறு, குறு விவசாயிகள் பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவித்து வருகின்றனர்.இதனையடுத்து அரசு மாற்று பயிர் செய்ய ஆலோ சனைகள் வழங்கியது. இதன்படி கொய்மலர் சாகுபடியும், மலைதோட்ட காய்கறி விவ சாயமும் செய்யப்பட்டது.*

மலை தோட்ட காய்கறி களான பீன்ஸ், உருளைக் கிழங்கு, கோஸ், கேரட் போன்றவை விவசாயம் செய்யப்படுகிறது. தற்போது எங்கள் விவசாய நிலத்தில் உருளைக்கிழங்கு பயிர் செய்துள்ளோம்.
உருளைக்கிழங்கு விவசாயம் செய்யும் வகையில் மண்ணின் தன்மையும், தட்பவெப்ப நிலையும் உள்ளது. இதனால் விளைச் சல் நன்றாக உள்ளது. இந்த பகுதியில் அறுவடை செய்யப்படும் உருளைக் கிழங்கை மேட்டுப்பாளையம், ஊட்டி மொத்த காய்கறி மண்டிக்கு கொண்டு சென்று விற்பனை செய்து வருகிறோம்.
அதிக மவுசு
நீலகிரி உருளை கிழங்கிற்கு கோவை, மதுரை, சென்னை, கேரளா, கர்நாடகா வில் அதிக மவுசு ஏற்பட்டு உள்ளது.
இதனால் ஒரு கிலோ உருளைக்கிழங்கு ரூ.18 முதல் ரூ.20 வரை விற்பனையாகி வருகிறது. அரசு உருளைக் கிழங்கு விவசாயத்தை ஊக்கு விப்பதற்கு மானியம் வழங்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

## பயனாளிகளுக்கு வழங்குவதற்காக 40 ஆயிரம் சில்வர் ஓக் மரக்கன்றுகள் தயார் வனச்சரகர் தகவல்

மஞ்சூர், ஜூன்.24–
குந்தா வனத்துறை சார்பில் வளர்க்கப்பட்ட 40 ஆயிரம் சில்வர் ஓக் மரங்கள் பயனாளிகளுக்கு வழங்க தயார் நிலையில் உள்ளதாக குந்தா வனச்சரகர் ராமசாமி தெரிவித்துள்ளார்.
சில்வர்ஓக் மரங்கள்
நீலகிரி மாவட்ட நிர்வாகம் மரம் வளர்க்கும் திட்டத்தை செயல்படுத்த மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. மேலும் வனத்துறை சார்பில் தேயிலை தோட்டங் களின் நடுவே நிழல் தரும் மரங்களான சில்வர் ஓக் மரக்கன்றுகள் வளர்த்து பயனாளிகளுக்கு வழங்கப்படு கிறது.
மேலும் அதனை பராமரிக்க ஊக்க தொகையும் வழங்கி வருகிறது
இந்த நிலையில் குந்தா வனச் சரகம் சார்பில் குன்னக்கம்பை அருகில் பொங்கலட்டி என்ற இடத்தில் உள்ள நர்சரியில் கடந்த சில ஆண்டுகளாக சில்வர் ஓக் மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு குந்தா பகுதி மக்களுக்கு வழங்கப்பட் டுள்ளது.
40 ஆயிரம் மரக்கன்றுகள் தயார்
நடப்பு ஆண்டில் சுமார் 40 ஆயிரம் சில்வர் ஓக் மரக் கன்றுகள் மட்டுமின்றி சோலை மரக்கன்றுகள் சாலை யோரங்களில் வளர்க்கவும் தயார் செய்யப்பட்டு உள்ளது. இது சம்பந்தமாக குந்தா வனச்சரகர் ராமசாமி கூறிய தாவது:–
குந்தா வனச்சரகம் சார்பில் தற்சமயம் சுமார் 40 ஆயிரம் மரக்கன்றுகள் தயார் செய்யப் பட்டு நாற்றுகள் வினியோகம் செய்ய தயார் நிலையில் உள்ளது. இந்த மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்க ஏற்பாடுகள் நடந்து வருகிறது. விவசாயிகள் தங்களது தேயிலை தோட்டங்களுக்கான கம்ப்யூட்டர் சிட்டா நகல் பெற்று, சம்பந்தப்பட்ட அலு வலரிடம் கையொப்பம் வாங்கி, குந்தா வனச் சரகத்தில் தங்களது தேவையான சில்வர் ஓக்

மரங்கன்றுகளுக்கான விண்ணப்பத்தை அளிக்க லாம்.
பெறப்பட்ட விண்ணப் பத்தை தேர்வு செய்து ஒரு ஏக்கருக்கு 200 நாற்றுகள் முதல் அதிகபட்ச மாக ஒரு ஹெக்டேருக்கு 500 நாற்றுக்கள் வரை வழங்கப்படும். அவ் வாறு வழங்கப்படும் நாற்றுக் களை பராமரிக்க வனத்துறை சார்பில் ஊக்கத்தொகையும் அளிக்கப்படும்.

விண்ணப்பிக்கலாம்

எனவே இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்தி சில்வர் ஓக் நாற்றுக்கள் பெற உடனடியாக விண்ணப்பங் களை குந்தா வனச்சரக அலு வலகத்திற்கு அளிக்க வேண் டும் என கேட்டு கொள் கிறேன்.
இவ்வாறு வனச்சரகர் ராம சாமி கூறினார்.